சைவ பரிபாலன சபை வெளியீடு
ஆரம்பம்: 1889 விரோதி ஷு ஆவணி மீ 28-ஆம் உ

இலங்கையிற் செய்தித் தாளாகப் பதிவுபெற்றது. பதிவு இல - 2.

பிரதி விலை : ரூபா 2-00

# இந்து சாதனம்
சிவமயம்
(HINDU ORGAN)

புத் - 101 | யாழ்ப்பாணம்:- சுக்கில ஷு பங்குனி மீ 31 உ ( 13 04 - 1990 ) [ இதழ் - 11.

# பிறந்திடும் வருடம் மறந்திடும் கர்வம்

## திறந்திகழ் தொண்டினில் அறம் பல கண்டிடல்

உ

திருச்சிற்றம்பலம்

பண்ணினேர் மொழி யாளுமை பங்கரோ
மண்ணி னுள்வலஞ் செய்மறைக் காடரோ
கண்ணி னாலுமைக் காணக் கதவினைத்
திண்ண மாகத் திறந்தருள் செய்மினே.

திருச்சிற்றம்பலம்

திருமறைக்காடு : இறைவன் : மறைக்காட்டீசர்.
இறைவி ; யாழைப் பழித்த மொழியம்மை.
( திருக்குறுந் தொகை. )

### அர்ப்பணமாக ஆற்றுவோமாக

அன்னையும் பிதாவும் முன்னறி தமிழ்சைவம்
பொன்னெனப் போற்றி மன்னுவம் வாழ்க்கை
வாழும் நாடுநாம் ஆளுந் தேயம்
சூழுஞ் சுதந்திரம் நீளும் நெறியில்
ஈழம் நலங் கொள நாளுந் துலங்க
யாழும் இலங்க ஏழும் இசைசெய்
பாணர் முன்னோர் பூணர சாக்கம்
காணுவம் வாரீர் கடவுளும்
பேணுவர் எம்மைப் பிறந்திடிவ் வாண்டிலே.

### இந்துவின் சிந்தனை

இன்பமும் துன்பமும்
ஒன்றென எண்ணுக

பேறழிவு சாவு பிறப்
பின்பந் துன்பமென்
றுறுள அந்நாள்
அமைந்தன — தேறி
அவையவை வந்தால்
அழுங்காது விம்மாது
இவையிவை என்று
ணரற் பாற்று.

செல்வம், வறுமை, இறப்பு, பிறப்பு, இன்பம், துன்பம், என்கின்ற ஆறும் முன்செய்த வினைகாரணமாசுக ஒவ்வொருவருக்கும் அமைந்துள்ளன. இன்ப துன்பகளுக்குக் காரணமான அவைகள் மாறி மாறி வரும்போது மகிழாமலும், வருந்தாமலும் இன்ன வினைகளால் வந்தவை என்று ஆராய்ந்தறிந்து அடங்குதலே செய்யத் தக்கது.

### உலக சுகாதார தினம்

இன்று உலக சுகாதார தினம். யாழ் மாநகரசபைக்கு உதவு முகமாக குப்பைத் தொட்டிகளையும் "சுத்தம் சுகம் தரும்" என்னும் அறிவுரை மும்மொழிகளிலும் அச்சடிக்கப்பெற்ற அட்டைகளையும் மில்க்வைற் தொழில் நிறுவனம் யாழ் மாநகரசபை ஆணையாளரிடம் கையளித்துள்ளது.

பொதுமக்கள் கூடும் மற்றும் இடங்களுக்கும் இவை அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

## அப்பர் சுட்டிய சரியை நெறிகள்

சைவ நெறியின் சாதனங்களான சரியை, கிரியை, யோகம் ஞானம், ஆகிய நான்கும் இறைவனை எய்துவதற்கான நெறிகளைப் புகட்டுபவை. அரும்பு மலர், காய் கனி, எனக் கூறப்படும் இவை நம் புற வாழ்வு அக வாழ்வு ஆகியவற்றை நெறிப்படுத்தி ஈற்றில் வீடு பேற்றைத் தரவல்லவை.

இவற்றுள் முதலாவதுபடியாக கருதப்படு சரியை நெறியிற் சாதகன் தன்னை அடிமையாகவும் இறைவனை ஆண்டானாகவும் பாவனை செய்கிறான். இந் நெறி ஆணவத் தடிப்பைக் குறைக்கும் தன்மையது. இந் நெறி பற்றிச் சிவஞான சித்தியாரும், திருமந்திரமும் குறிப்பிடுகின்றன.

சமய குரவர் நால்வருள் இந் நெறியைக் கடைப்பிடித்துத் தாமே முன்னோடியாகத் திகழ்ந்தவர் அப்பரே. இவர் தமது திருமுறைகளிற் சரியை வழிபாட்டு நெறிகளான அஞ்செழுத்து ஓதுதல் அடிபணிதல், ஆப்பிநீர், அலகு கொண்டு திருக்கோயிற் சுத்தி செய்தல், பூமாலை கட்டுதல், சங்கம் ஊதுதல், தாளம் கையிற் கொள்ளல், போற்றுதல், திலகம் இட்டுக்கொள்ளல், துதித்தல், நாமங்களை ஓதுதல், முழுக்காட்டுதல், விளக்கிடுதல் முதலிய வழிபாட்டு நெறிகளைப் போற்றியுள்ளார்.

அவர்தம்பேரியல்பு தோன்ற அனுபவ நிலையில்.

நிலைபெறுமாறெண்ணுதியேல்
நெஞ்சே நீவா
நித்தலும் எம்பிரானுடைய
கோயில் புக்கு
புலர்வதன்முன் அலகிட்டு
மெழுக்கும் இட்டு
பூமாலை புனைந்து ஏத்திப்
புகழ்ந்து பாடி
தலையாரக் கும்பிட்டுக்
கூத்தும் ஆடிச்
சங்கராசய போற்றி
போற்றி என்றும்
அலைபுனல் சேர்செஞ்சடை
எம் ஆதி என்றும்
ஆரூராஎன்று என்றே
அலறுநில்லே.

என அறிவுறுத்தி மகிழ்தல் ஈண்டு குறிப்பிடத்தக்கது. சைவர்களாகிய நாமும் அப்பர் பின்பற்றிய சரியை நெறியின் சிறப்பினை உணர்ந்து அதனைப் பின்பற்றுவோமாக.

ப. சர்வேஸ்வரஐயர். B,A.

## விஞ்ஞானக் கண்கொண்டு மெய்ஞ்ஞானம் காண்போம்

பிறந்து பிறந்து பேரிடர்ச் சேற்றில் உழன்று கொண்டிருக்கும் எமக்கு பேரின்பப் பரம் பொருளை அடையவைப்பது சமயங்கள் என்றால் மிகையாகாது. இவ்வாறு அறிவின்மை எனும் படுகுழியில் வீழ்ந்து பரிதவிக்கும் எமக்கு அறிவொளி மிளிரச் சைவம், அறிவியல் விஞ்ஞானம் ஆகியவற்றிற்கிடையேயுள்ள தொடர்புகளை ஆராய்வது மிகப் பொருத்தமாகும்.

சைவக் கோவில்களில்காவடி எடுத்தல் பன்னெடுங்காலமாக கைக்கொள்ளப்பட்டு வரும் செம்முறையாகும். காவடி எடுக்கும் போது சில ஊசிகள் குற்றப்படுகின்றன. இவ்வாறு ஊசிகள் குற்றப்படும் போது உடலிலுள்ள மின்னழுத்தம் மாற்றமடைவதோடு உடலிலுள்ள இரசாயன பதார்த்தங்கள் சீராகி உடலின் மின்னோட்டம் சீராக்கப்படுவதால் நரம்பு தொழிற்பாடு சீராக்கப்பட்டு பல்வேறு நோய்கள் குணமாகின்றன. தற்பொழுது அக்குபங்ஷர் வைத்தியமும் இதேமுறையில் இப்படிப்பட்ட உலோக ஊசிகளை உடலில் ஏற்றுவதனால் நோயைக் குணமாக்குகின்றது.

கால், பாதத்தில் அனேகமான நரம்புகள் வந்தடைவதாக மருத்துவ விஞ்ஞானம் மூலம் அறிகின்றோம். பல காலமாக நோய் வாய்ப்பட்ட சைவ சமயிகள் நேர்த்திக் கடன்களுக்காக முள் மிதியடி மிதித்தல் கைக்கொள்ளப்படுவது வழக்கம். அப்போது முள் மிதியடியால் பாதத்திற்கு அழுத்தம் வழங்கப்படுகின்றது இந்த முறையிலே தற்பொழுது இந்த நரம்பு முனைப்பகுதிகளில் அழுத்தம் கொடுப்பதன் மூலம் நரம்பு தொழிற்பாட்டைச் சீராக்கி அக்குபங்ஷர் மருத்துவம் பல்வேறு நோய்களைக் குணப்படுத்துவதாக அறியப்படுகின்றது.

சைவசமய இறைவழிபாட்டுக் கிரியைகள் மனித உள்ளங்களின் உளவியல் வகையிலான பாதிப்புகளைக் கட்டுப்படுத்துவதுடன் நரம்பு.மூளை ஆகியவற்றை உற்சாகமூட்டுவதாய் அமைகின்றது;

சைவ ஆலயங்களில் வழங்கபடும் திருநீறு நரம்பு தொழிற்

( வளர்ச்சி 4 ஆம் பக்கம்)

தெல்லியூர் - வெற்றிவேல் - சக்திவேல்

## நீள நினைக்கவைத்த நெறியாளன்

### ஈழகேசரி பொன்னையா

குரும்பசிட்டி சன்மார்க்க சபை தனது தாபகரின் நினைவு நாளை 01. 4. 90 ஞாயிற்றுக்கிழமை ஆரா அன்புடன் விழாவாக நிகழ்ந்தது.

சட்டத்தரணி. பொ. பூலோகசிங்கம், பல்கலைக்கழக விரிவுரையாளர் நினைவுரை ஆற்றினர்.

கலாகேசரி ஆ. தம்பித்துரை சித்திர வித்தியாதிகாரி தலைமை தாங்கினர்.

( வளர்ச்சி 4 ம் பக்கம் )

★ சுத்தம் நிதமும் பேணுவோம் சித்தம் தெளியும் காணுவோம் ★

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தியதெல்லா மரனுமமே
சூழ்கவையகமுந் துயர்தீர்கவே
திருச்சிற்றம்பலம்,

இந்து சாதனம்
சுக்கில ஆண்டு பங்குனி மீ 31 உ.
( 13— 04 — 1990 )

( இதய இராகம் )

## ஆன முதலில் அதிகம் செலவா?

ஆவி அகத்ததோ புறத்ததோ என்று அறிவற்று நிற்கும் நிலைமையை யுண்டுபண்ணிய வன் செயல்கள், அதிர்ச்சிகள், பேரழிவுகள் என்ற புன்மை ஒருவாறு போய்விட முன்னைய அமைதியை நோக்கிய வண்ணம் நொந்த கால்களை முன் வைத்து முயற்சிக்கும் இவ் வேளையிலே எங்கள் ஒவ்வொரு செயலும் சிந்தித்துச் சீர் தூக்கி ஆற்றப்பட வேண்டியது அவசியமாகும்.

வீண் விரயம் என்ற ஒரு முறைக்கேடு எல்லாத் துறைகளிலும் காணப்படுவதையே நாம் இங்கே குறிப்பிடுகின்றோம்.

'எழுச்சி' என்ற உணர்ச்சியினாலே உந்தப்பட்டு அளவுக்கு மிக்கதாக எதையும் நாம் செய்ய வொண்ணாது.

ஆடம்பரத்துக்கு இந்த வேளையில் சிறிதளவுகூட இடம் கொடுக்கக்கூடாது என்று நாங்களாகவே எங்கள் செய்கைகளைச் சீர்ப்படுத்த வேண்டும்.

அடியிலிருந்து தொடங்கினால், ஆலயங்களை எடுத்துக் கொள்ளுவோம்.

கோயில்களில் யாவும் குறும்புகளினாலே சீர் கெட்டுப் போன வழியிலே அவற்றைப் புனர் அமைப்பது அவசியம். அந்த வகையிலே மகாகும் பாபிடேக நிகழ்ச்சிகள் எல்லாத் தலங்களிலும் நடைபெறும் வண்ணமாக இருக்கின்றன. இவற்றுக்கு ஏராளமான பொருள், பொன் தாராளமாக வழங்கப் பெறுகின்றன வெனினும் ஆராய்ந்துபார்க்கின் விரயம் வீழ் கொண்டிருப்பது புலனாகும்.

ஆநந்தம் ஆத்மிக உணர்ச்சி யாவும் இருக்கும் அதே வேளை இவற்றின் வழி வீண் பொருள் அழிவு விரவ விடுவது முறையாகாது.

## நகுலாம்பிகாதேவிக்கு மிகு மாண்பு மாவிழா

### புத்தாண்டிற் பொலியும் தேர் உலா

4-4-90 பகல் 11 மணி: கொடியேற்றம். 14-4-90 சனிக்கிழமை உதயம். 5-00 புது வருட சங்கிராந்தி விசேடபூசை உற்ஸவம், பி. ப 2 00 தேர்த் திருவிழா 15-4-90 ஞாயிற்றுக்கிழமை உதயம் - தீர்த் தோற்ஸவம்.

ஆதீன கர்த்தர் சிவஸ்ரீ கு. நகுலேசுவரக் குருக்களவர்கள் அனைத்துக் கிரமங்களும் நெறி முறை அமைய நிகழ்ச்சிகளை மேற்கொள்கின்றனர்.

விழாக்கள் என்றால் மித மிஞ்சிய நிகழ்ச்சிகள் இடம்பெற வேண்டுமென்பதல்ல.

இந்த இடத்திலே ஒரு நிகழ்ச்சியைப் பற்றிச் சிந்தனைக்கெடுப்பது பொருத்தமாகும்.

புகைப்படம் நிழற்படம் என்ற வகையிலே ஒரு புதிய நிகழ்ச்சி ஆலயங்களில், வீடுகளில் வேறு மங்கள வைபவங்களில் இடம் பெற்றுவிட்டது.

நிழற்பட நிபுணரை எதிர்பார்த்த வண்ணம் நிகழ்ச்சிகள் கால தாமதமாகும் நிலைமையும் உண்டாகின்றது.

நின்றால், இருந்தால் நிமிர்ந்தால் என்றெல்லாப் பாங்கிலும் நிழற்படம் எடுபட வேண்டும் என்பதுநியமமாகின்றது.

திருவுருவங்களையும் குருமார்களையும் ஒருங்கு அமைக்கும் படம் எடுக்கும் விடயத்தில் அப்பணியிலீடுபவர்களின் உடை, நடை எல்லாம் சமயசார ஒழுங்குகளுக்கு உடன்பாடாகுமா!

இவ்வாறு ஒவ்வொரு அம்சத்திலும் எவ்வளவோ வீண் நட்டம் வருவதைக் காணலாம்.

கற்பூரம் என்ற அருச்சனைக்குரிய பொருள் இன்று அழிவு இரசஉலோகக்கலவையே. எற்றுக்கு இதனைப் பயன்படுத்துகிறோம்; சற்றும் திருவில்லாத, முற்றும் பொருத்த மற்றபொருள் இதற்கு விலை எல்லை கடந்து வருகின்றது.

ஒன்று மட்டுமல்ல - ஏன் உடை உலாச்சின்னங்கள் யாவும் ஒருங்கமைந்த விளம்பர விசித்திரம் - இதற்குச் செல்லும் பணம் இலட்சக் கணக்கில் என்றால் ஆன முதலில் அதிகம் என்று நிரூபிக்கவும் வேண்டுமா.

மானமிழக்க வேண்டாம்.

அமைவாக வாழ்க்கையை அமைத்துக் கொள்வோம்.

# கல்வித் திணைக்களம் சைவம் கற்பிக்கும் திட்டம்

## அதிகாரி திரு க. மகேசன் அவர்கள் தரும் விளக்கம்

● செயற்றிட்டம் ● நோக்கம் ● செயற் கூறுகள்

### (1) காலைக் கூட்டம்

1. சபைப் பழக்கம், ஆளுமை, வளர்ச்சி
2. நன் மாணாக்கரை உருவாக்குதல்.
3. சைவ நெறிப்பேச்சாளரைஉருவாக்குதல்
4. சமய ஈடுபாட்டையும் ஆன்மீக மேம்பாட்டையும் ஊக்குதல்.

1. விடய தொடர்பான குழு: அதிபர்/உபஅதிபா, பொறுப்பாளர், சமயாசிரியர், சங்கீத ஆசிரியர்.
2. பேச்சாளர் முதலியோர் பட்டியல் தயாரித்தல்
3. பேச்சு/செயல் விடயங்களை நிரற்படுத்தல்
4. விளம்பரப் பலகையில் இடுதல்.
5. நடைமுறைப் படுத்தல்
6. 2; 5 தொடர்பாக குழுவிற்குப் பயிற்சி அளித்தல்
- ஆசிரியர் மாணவர் அனைவரும் பங்குபற்றல்

### (2) பண்ணிசை

1. திருமுறைகளை பகிரங்கமாகப் படிக்கும் மனப்பாங்கை வளர்த்தல்.
2. பண்ணோடு பாடப் பழகுதல்.
3. திருமுறைகளின் முக்கியத்தை உணரச் செய்தல்.

1. முற்படி குழுப்பொறுப்பு
2. பயிலத்தக்க திருமுறைகளைத்தெரிதல்
3. அச்சிட்டுச் சகல மாணவருக்கும் வழங்குதல், சங்கீதம் பயிலும்மாணவருக்குப் பயிற்றுதல்
4. பின்னர் மாதம் ஒரு வகுப்புக்குப் பயிற்றுதல்.
5. காலைக் கூட்டத்தின் போதும் விழாக் போதும் பயின்றவர் மட்டும் சேர்ந்து பாடுதல்.

### (3) வழிபாடு

1. நல்வழிப் படுத்தல் ஒழுக்க சீலராக்குதல்.
2. வழிபாட்டு முறைகளை அறிதல்.
3. உயிருக்கும் உயிர்க்குயிருக்கும் நெருக்கமான உறவை உருவாக்குதல்.

1. வழிபாடு- எண்ணக்கரு விளக்கம்;
2. உடற்றூய்மை உளத்தூய்மை;
3. நீர், மலர், திருமுறை தாலும் கொண்டு பூசை செய்தல்.
4. ஆலயத்திற் கடைப்பிடிக்கும் விதிகள் பற்றி அறிதல்.

### ( 2 ) யோகப் பயிற்சியும் தியானமும்

1. உடலுறுதியும் உளவுறுதியும் பெறுதல்
2. தன்னுள் இனிதமர்ந்துள்ள ஈசனை உணர்தல்.
3. புறமனததிலிருந்து நடுமனம் அடிமனத்துக்கு நகர்தல.

1. தியானத் துணை புரியும் சில பயிற்சிகளைப் பயிலுதல்.
2. தியானத்திலிருத்தல்.
3. உணர்வுகளைப் பிறருடன் பகிர்ந்து கொள்ளுதல்.

### ( 5 ) ஆலயத் தொண்டு

1. சரியைத் தொண்டுமூலம் திருக்கோயில் அபிவிருத்தி சார்பான மனப்பாங்கை வளர்த்தல,
2. ஆலயங்களைப் புனிதமாக்குதல்
3. ஆலயங்களைப் பேணிப் பாதுகாப்பதற்கான மனநிலையை வளர்த்தல்.

1. எல்லா நாட்களிலும் ஆலயத்திலே செய்யத்தக்கபணிகளை நிரைப்படுத்தல்.
2. விழாக்காலத்திலே ……..
3. தொண்டு செய்வதற்கான மனோநிலையைப் பயிற்சிமூலம் உருவாக்குதல்,
4. தொண்டுசெய்யும் மாணவருக்கு ஆலய நிருவாகத்திட மிருந்து பிரசாதம் வழங்கச் செய்தல்

### (…) சைவநூற் பாராயணம்

1. கற்கவேண்டிய நூல்களை அறிதல
2. அந் நூல்களைப் படிக்கும் பழக்கத்தை வளர்த்தல-
3. அவற்றைப் பணும் முறையினை உணர்தல.

1. 1 - 12 வரையான திருமுறைகளைப் படித்தல்.
2. இயற்றிய விளக்கங்கள் பொருள் நூல்கள் முதலானவற்றைப் படித்தல்
3. சைவவினாவிடை I , II . சைவபோதம் I ம் II பெரிய புராண வசனம்

### ( 7 ) சிவசம்பந்தமான கலைகள்

1. சிவ சம்பந்தமான கலைகள் 64 வகை அறிதல்
2. இன்பவாழ்வுக்கு இன்றியமையாத கலைகளே சிவ சம்பந்தமானவை என்பதை உணர்தல்

1. ஆடல் பாடல் கலைகள் கருவிகள்
2. கட்டடம், சிற்பம், ஓவியம்.
3. ஆடைஅலங்காரமும் அணிகலன்களும்
4. இல்லத்தை அழகுபடுத்தல்.
5. ஆலயத்தை அழகுபடுத்தல்.

## நெடுஞ்சாலை ஓரத்தில் ...

( 3 ஆம் பக்கத்து வளர்ச்சி )

தொழிலைத் தொடங்கி விட்டனர். ஆசை காட்டிப் பாசங்காட்டி தங்கள் மதத்துக்கு ஆட்சேர்த்தனர். இதற்கு அச்சு இயந்திரம் தேவையானது. பத்திரிகை தோன்றியது. உதயதாரகை 1841 வருடம்.

இந்த வியாதி தொற்றுநோய்- சுத்தோலிக்க சங்கமும் விட்டுவைக்கவில்லை, எழுந்தது சத்தியவேதபாதுகாவலன் இந்த விபரீதங்களைக்கண்ட அந்த நல்லூர சற்குருமணி எந்த விதத்திலும் சைவ மதத்தைக் காப்பாற்ற வெழுந்தார் ஆதரவாளர்கள் அபிமானிகளைத்தட்டி எழுப்பினார் உதயபானுவென்று ஒரு பிரசுரம் வெளியானது. ஆனால் தம்பி இதை எண்ண இதயம் பதை பதைக்கிறது.

விசை வண்டியும் வருகிறது. இன்னொரு முறை சந்தித்தால் வேறும் விபரம் சொல்லலாம், -- தாத்தா!

கோடி நமஸ்காரம் – அறிவுச் சாடிபோல வல்லவோ பெரியவர் இருக்கிறீர்கள். சாடி பத்திரம் , வணக்கம் , ஒருவர்.

✕✕

# நெடுஞ்சாலை ஓரத்தில் நேர்முகத் தேர்வு.

விசை வண்டி வருந் திசையை நோக்கிய வண்ணம் நிற்கின்றார் நாடித் தாத்தா.

அசைந்து அசைந்து அவரை நோக்கி வருகின்றார் ஒருவர்

பெரியவரே வணக்கம் ஏதாவது சொல்வீர்களா செய்தித்தாளிலே சேர்ப்பதற்கு — ஒருவர்

நீங்கள் என்னவகையிலே என்னை நாடுகிறீர்கள் — தாத்தா

இப்பெழுது சிலநாட்களுக்கு முன் செய்தித்தாள் நிருபராக விண்ணப்பித்தேன். அந்த அதிபர் யான் ஏதும் பத்திரிகைக்கு எழுதியதுண்டா என்று வினவினார் -- எனது பற்றாமையையுணர்ந்தேன். புறப்பட்டேன் இந்தப்போக்கில் ஏதாவது அறிந்த எழுதுவதற்கு -- ஒருவர்

அப்படியா? நன்று சொல்கின்றேன் நின்ற நிலையிலே எழுதமுடியுமானால் முயற்சிக்கவும் -- தாத்தா

பெரியவரே உங்கள் கையில் உள்ள பத்திரிகையென்ன -- ஒருவர்

இந்துசாதனம், நீங்கள் முன்பார்க்கவில்லையா -- தாத்தா

பார்த்தது இல்லை கேள்விப்படிருக்கிறேன் - இதுத ஆகப் பழைய பத்திரிகை. இந்நாட்டில் -- ஒருவர்

பழையதுதான் நூறு வருடங்கள் கடந்து விட்டன என்றாலும் மூத்தவெளியீடுகள். உண்டு உதயதாரகை, சத்தியவேத பாதுகாவலன் - 1874- தெரியுமா --தாத்தா

அந்தப்பெயர்களும் கேள்வியளவிலேதான் -- அப்படியானால் மூதல் வெளி வந்தது எது எப்பொழுது என்று தயவு செய்து விளக்கமாகக் கூறமுடியுமா -- ஒருவர்.

தம்பி இந்தவிடயம் ஒரு நீண்டகதை. இந்தநாட்டிலே சொந்த ஆட்சி— தமிழ் அரசு இருந்தகாலம் ஆதிகாலம் அதை நினைக்கவே நெஞ்சு குமுறுகிறது. அந்தப் பெருமை இழந்து போனதைப்பற்றிச் சொல்லத் தொடங்கினால் உங்கள் கேள்விக்கு மறுமொழி பாரதமாகும். சுருங்கச் சொல்கின்றேன்

''முன்னே குளக்கோட்டன்
மூட்டுந் திருப்பணியைப்
பின்னே பறங்கி பிடிப்பனே-
--- சொன்னேன் கேள்
பூனைக்கண் செங்கண்
புகைக்கண்ணன் போனபின்பு
மானே வடுகாய் வரும்.

தமிழ்ப் புலவன் என்றாற் சிந்தனைச் சிற்பி தம்பி. ஆனை ஆர் என்று சொல்லி அவன் அங்கத்தைச் சுட்டிக்காட்டி, சித்திரத்தைப் பாரும் தம்பி

இந்த புற நாட்டாரெல்லாரும் தேக உறுப்பில் வேறுபட்டவர்கள். கண் அந்தவேற்றுமையைக் காட்டுமாம் -- பூனைக்கண் செங்கண், புகைக்கண் என்று ஒல்லாந்தர்போர்த்துக்கேயர் ஆங்கிலேயரைப் புலவர் அழகாகச் சொன்னாரே -- தாத்தா

இந்தப் பேர்வழிகள் இங்கே எப்பொழுது கால் வைத்தார்கள் பெரியவரே -- ஒருவர்

மேற்குநாட்டிலே கடற்கரைப்பிரதேசங்களில் இருந்தவர்கள் 'திரைகடல் ஓடியும் திரவியந்தேடு' என்ற படி சமுத்திரங்களிலே துணிந்து புறப்பட்டுக் கிழக்குத் திசையில் உள்ள நாடுகளின் கரைகளிலே இறங்கியதும் அல்லாமல் அங்கே நங்கூரமிட்டு நடமாடி ஆட்சி புரிந்தார்களாம்.

கொலம்பஸ் வாஸ்க்கோடிகாம என்றுகேள்விப்பட வில்லையோ -- இப்படித் தொடங்கியது செப்படி வித்தையாக முடிந்து விட்டது- தாத்தா

14 (100) ஆண்டுபோத்துக்கேயர். 19 (100) ஆண்டு ஒல்லாந்தர் 1815 ம் ஆண்டு ஆங்கிலேயர் ஒருவரை ஒருவர் போரிலே வெருட்டி வர நாங்கள் இரையானோம் தம்பி. -- தாத்தா

அதுசரி அந்தப்பழையபத்திரிகை எந்தவகையிலே எழுந்தது...... ஒருவர்

ஆங்கிலேயர் வந்பொழுது அமெரிக்க மிஷனறிதவ சங்கத்தார் ஏதோ மணம் பிடித்து இங்கே மோந்துவந்து விட்டனர். உடனே சுய

(வளர்ச்சி 2 ஆம் பக்கம்)

க. பொ. உயர்தரம்

## இந்து சமயம்

### விரிவான பாடத்திட்டம்

தவணை I

1) இந்து சமயத்தின் பொதுப்படையான பௌதிகாதீதப் பின்னணியை ஓரளவு ஆராய்தல்

1. பின்வரும் நூல்கள் பற்றிய சுருக்கமான அறிவு
வேதங்கள், ஆகமங்கள், பிரஸ்தானத் திரயங்கள், (கீதை, பிரம்ம சூத்திரம், உபநிடதம்) இதிகாசங்கள் புராணங்கள், தருமசாத்திரங்கள், பன்னிரு திருமுறைகள், திவ்வியப் பிரபந்தம், கந்தப்புராணம், பாகவதம் 14 சித்தாந்தசாத்திரங்கள்.

தவணை II

2. தென்னாட்டுச் சைவமரபைச் சிறப்பாகக் கருத்திற் கொண்டு சைவசமயத்தைச் சுருக்கமாக ஆராய்ந்து கற்றல்
3. தென்னாட்டு வைணவ மரபைச் சிறப்பாகக் கருத்திற் கொண்டு வைணவ சமயத்தைச் சுருக்கமாக ஆராய்ந்து கற்றல்
4. இந்துசமயத்தின் ஏனைய பிரிவுகள்
சாக்தம், கௌமாரம், காணபத்தியம், சௌரம் பற்றிச் சுருக்கமாக ஆராய்தல்
5. அறிவுக்குரிய வழிகள்
(அ) புலக்காட்சி, (ஆ) அனுமானம், (இ) அருள் வெளிப்பாடு

தவணை III

6. ஊழ், மறுபிறப்புப் பற்றிய கோட்பாடு
7. ஆறு, இந்து, தரிசனங்களைச் சுருக்கமாகவும் வேதாந்த தத்துவங்களின் வகைகளை (அத்துவைதவம் விசிட்டாத்து வைதம் துவைதம்) விரிவாகக் கற்றல்
8. சைவசித்தாந்த நெறியினை விரிவாகக் கற்றல்

2) முத்தி பெறுவதற் குரிய நால்வகை மார்க்கங்கள் (சரியை, கிரியை, யோகம், ஞானம்)

தவணை IV

1. சமயச் சடங்குகள் ஒழுகலாறு ஆகியவற்றில் உட்கிடைப் பொருளை உணர்த்தல்
2. குருலிங்கம் சங்கமம்
3. நால்வகை யோகம் கருமயோகம் பத்தியோகம் ராஜயோகம், ஞானயோகம்

தவணை V

4. திருக்கோயில், கோயில் வழிபாடு ஆகியவற்றின் அடிப்படைத் தத்துவங்கள்

2) வாழ்க்கையை நெறிப்படுத்தும் இந்து சமயக் கோட்பாடுகளை அறிதல்

5. வருணாச்சிரமதர்மம்

தவணை VI

6. நான்கு புருடார்த்தங்கள்

3) இந்து ஒழுக்கவியல் அடிப்படை அறங்கள்

# வனிதையர் மனது

மனிதனுக்கு இரண்டு கண்கள். ஆண் ஒன்று- மற்றையது பெண்.

பெண்களைப் பற்றிப் பேசுவதற்குப் பெண்களுக்குத்தான் முன்னுரிமை.

ஆண்களும் தங்கள் சோடிகளாகவுள்ளவர்களைப்பற்றி அநுபவமுறையிலே கருத்தை அமைக்கலாம். ஆனாலும் — அணங்கினரின் மனதை அறிவது ஆடவர்களுக்கும் அரிதுதான்.

நாடோடிப் பாடகர் சொல்லுவார் :

"எங்கள் மனதைத்
தொட்டு விட்டுப்
போறவரே - உங்கள்
மனத்தைக் கொஞ்சம்
சொல்லி விட்டுப்
போங்கள்"
என்று.

எனவே வனிதா மணிகளைப்பற்றிப்புனிதமானவற்றைச் சொல்லக் காரிகையாருக்குத்தான் சுலபமாகும்.

இந்த அரிவையர்கள் அந்தரங்கத்தைப் பற்றி அறிந்தவற்றைச் சொல்வதற்கு முன் பெண் இனத்

(சிவகங்கா கைலைநாயகி)

தின் பெருமையைப் புலப்படுத்தும் சொற்களைத் தொகுத்து உரைப்பது பொருத்தமாகும்.

சங்கத்தமிழ் இலக்கியங்களில் மற்றும் புராணங்களில் இன்னும் இதிகாசங்களில் வரும் பெண் இனத்தைப்பற்றியசொற்கள் வழமையாகி மரபுடைத்தாய் விட்டன.

அணங்கு :- அழகுநோக்கிப் பெண்ணுக்கு வழங்கப்படுவது, தெய்வப்பெண் திவ்வியத்துக்கும் - அணங்கு ஒரு சொல். தெய்வம் : அணங்குடை நெடுங்கோடு என்று புறநானூற்றில் வருவது காண்க.

பராசத்தி:- பேர் அணங்குடன் ஆடும் பெரும் பற்றப் புலியூர்.
- கோயிற்புராண -பாயிரம்;

அரிவை, ஆட்டி, காரிகை, காந்தை, சுந்தரி, சுரிகுழல், சிறுமி, தெரிவை, தையல். நாரி. நல்லாள், பிணா, பேதை, பெண்டு, ப்ரியை, மகடூஉ, மாது, மானினி. மாயோள் மடந்தை, மாயோள். மங்கை, என்பன வெல்லாம் காரணப் பெயர்களாகும். குணம், குறிகொண்டு பெண்ணை விளக்குவன.

பெய்வளை, ஏந்திழை, என்றும் பலவுள. இவற்றாற் பெறப்படும் ஒரு கருத்துப் பெண் இனத்தின் குணாதிசயங்களைக் குறிக்கும் எனக.

### பருவம் தரும் பெருமை

குழந்தைப்பருவம் மழலைப் பருவம் என்றவகையிலே மங்கைநல்லாளின் வாழ்வு வளம் அமைவது ஓர் சிறப்பு. பூப்பருவம் ஒரு பெரும் நிகழ்ச்சி மணப்பருவமும் அங்ஙனே மாதாப்பருவம் யாதினும் மிளிர்வது.

பெண் என்று ஒரு சொல், ஆய்வுக்குள்ளாகி அது ஒரு பெருங்கதையாக விரிந்துவிடும்

பெரும்புலவர்கள் தங்கள் அருங் கருத்தினை எடுத்துக் கவிபாடும் பொழுது பெண்ணையே நோக்குவர் பெண் இப் பூம்புனல் பாய்ந்து ஆடேல் ஓர் எபபவாய்-இலக்கியத்தில் எங்கும் மானே, மடமயிலே பவளவாய், பொற்றொடி அன்னநடையீர், என்று பலப்பல அடைமொழி அமைத்துப் பெண்ணைக் கூவியழைத்துத் தான் பாடுவார்கள் பாவலர்கள்

நல்லவர்கள் மெல்லியலார் என்றுமட்டும் இருக்காது கூற்றம் அன்னவர்களாய்க் கூனி போன்றவர்களையும் காவியங்கள் கற்பனையாகக்கூறும்

## மாவிழாக் கோலம் தேவி சிவனுக்கு

பங்குனித் திங்கள் மங்கல மெங்கணும்
சங்கொலி ஓசை மங்கள நாதம்
வைத்தியே சுவரர் வல்வையில் வண்ணையில்
முன்னகர் கொழும்பிற் பொன்னம் பலவர்
சுன்னை ஐயனார் பொன்னெழில் மாதகல்
பாணக வெட்டி மாணார் அம்மை
நவலூர் இணுவில் சிவகாமியம்மை
நல்லையில் சட்ட நாத சிவனும்
திருமலை யெழுபத் திரகாளியம்மை
இன்னன இன்னும் மன்னுமே
மாவிழாக் கோலம் தேவிசிவனுக் கே.

# HINDU ORGAN

APRIL 13 - 04 - 1990

## UNIVERSAL ADMISSION

*To The University*

The season for new schemes seems to have begun, perhaps as a forerunner to the ushering in of the new year.

It has been suggested that the elegibility for entrance to the university should be lowered down to the O' level of the G. C. E.

Here is a move that is smacking of the prevailing passion for democratic principles to be applied to every sphere of activity, and thus to throw open the guarded gates of the hall of higher learning to all who have the physcal capacity to knock at them.

However, the present Minister for Higher Education being a brilliant product of a university, we presume, will not rush in to make a major departure from the classical method of admitting students to the universities.

No educational institution that is designed for instruction and examination of students to all or many of the more important branches of learning, as the definition of the term university appears in the dictionary, can be considered as willing to take in all and sundry responding to popular agitation and make the matter a political adventure.

Universities cannot be regarded as a preserve for the privileged few.

The concept of imparting education free to all was introduced to helpe those not so affluent as to be educated in schools and that was a scheme that well responded to the call of democracy.

All that is required now is to provide for more efficient instruction in the elementary and secondary schools so that students will be enabled to go higher up on merit.

Hence a re-organization of the scheme of studies in school is urgently required, Teaching must become totally efficient to enable every student to be briliant in studies and that will pave the way for more admissions to the university.

## சேக்கிழார் செஞ்சொற் களஞ்சியத் தீஞ்சுவை

தமிழோ அழகு—
அழகுக்கு அழகுசெய்தார் புலவர்

திருக்கிளரும் ஆதிரைநாள் – திருவாதிரை – திருஞான
சம்பந்தர் இவ்வுலகிற் றோன்றியவேளை
அசைவில் செழுந்தமிழ்வழக்கு, அயல்வழக்கின் துறைவெல்ல.
இசைமுழுதும் மெய்யறிவும் இடங்கொள்ளும் நிலை பெருக.
சிவ பெருக்கும் பிள்ளையார்
கவுணியர் குலத்திலொரு காதலன்
புண்ணிய நறும்புனல் கொள் பொற்குடம்—நிறைகும்பம்
தாமரை மிசை - முதற் தழவி (முருகன்) என்ன.
பேறு உலகுக் கெனவரும் பெரியவர்
நீறு திரு நீற்று நெறியில் நிறுத்தி
சேயபொருள் செம்மை) திருமறையும் தீந்தமிழும் சிறக்க
வரும் நாயகன்
காழியர் தம் சீராட்டே.
கவுணியர் கற்பகமே.
ஏழிசையும் பல்கலையும் எவ்வுலகும் தனித்தனியே வாழவரும்
அவர்.
சிறுமணித்தேர்: செழுமணற் சிற்றில்
தருமத்தின் தலைநின்றார்;உலகு உய்ய மகப்பெற்றார் (சிவபாத
விருதயர்)
புண்ணியக்கன்று அனையவர்
எண்ணரிய சிவஞானத்தின் இன் அமுதம்
சிவஞான சம்பந்தர் — தவமுதல்வர்
சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம்
மல்லல் நெடுந்தமிழ்; இன்னிசை எழுந்து இசைந்த செழுந்தமிழ்
காழியர் தவமே; கவுணியர் தனமே, கலைஞானத் தாழிய
கடலே
மறைவளர் திருவே, வைதிக நிலையே வளர்ஞானப் பொறை
யணிமுகிலே
புகலியர் புகலே, பொருபொன்னித் துறைபெறு மணியே
சுருதியின் ஒளியே புண்ணிய முதலே, கலைவளர் மதியே
பண்ணியங் கதியே— பாலறு மதுரமொழிப் பவளவாயார்
மெய்நிறைந்த செம்பொருளாம் வேதத்தின் விழுப்பெருள்
வையமெலாம் உய்யவரு மறைச்சிறுவர்
இன்னிசை வண்டமிழ்ப் பதிகம்
சுருதிஇசைத் துறை உளோர்

## தாள நுண் கலை ஆழ நீளங்கண்ட மேதை

(இசை உலகில் எழுந்த தாரகை - வித்வ மேதை வி. தெட்சணாமூர்த்தியவர்களைப்பற்றி "இறை-ஒளி" முன் எழுதிய உரை)

(முற்றுடர் -2)

இசை இன்பக் கலை. இறை வழிபாட்டுடன் இணைந்த கலை. நந்தி, தும்புரு எனற நாமங்கள் எம்முன் என்றும் இலங்குவன. என்றுமுள்ள இசை எல்லையிலாதது. இலயமும் இத்தகைத்தே. அசை அளவு, இசை, இயைபு என்ற இலக்கணமமைந்தகலைப்புலமை அரியது பெரியது; இணையற்றது. இப்பெருமைக்குரியவர் ஈழம் ஈன்ற இளைஞன் இலய ஞான குபேர பூபதி வி. தெட்சணாமூர்த்தி;

'ஈழநாடு தாளநாடு' என்ற எழிலைத் தாயகத்துக்குத் தனிப் பெருமையாய் ஆக்கி அளித்த கலை அறிஞர் இவர். இலங்கா தேவியின் இசைக்கலை இலக்கியத்தை இலங்க வைத்த மேதை இவர். ஈழத்தின் கலா சாரத்தை வாழவைத்த கலைஞர் இவர். கரங்களிரண்டும் விரல்களைந்தும வரங்கள் பெற்ற பரமன் படைப்பு இவர். அரங்குக்கு அணி அளித்து எம் மருங்கும் புகழ் தமக்கமைத்த அருங்கலை விந்நாதர் இவர். கைகளும் ஏனைய உறுப்புகளும் மூளையின் அரசாட்சியில் இயங்கும் மெய் பொருந்தியவர் இவர். தாளம் என்பது கலையின் இலக்கண மென்றெடுத்துக் காட்டி அவ்வழி இன்பத்தை ஊட்டி ஆள வந்த அருமபெறற் சிருட்டி இவர். பல்லாயிரம் இரசிகர்களைப் பாரதத்திலும், ஈழத்திலும் தமது தவில் நவிலுற இசைப்பொழிவால் மெய்மறக்கச்செய்த வித்துவான் இவர்.

இவரையா இவ்வுலகு இழந்தது? இறைவன் மேலுலகப் பல்கலைக் கழக இலய ஞானப் பேராசிரியராக அழைத்து விட்டார். ஆகவே ஆற்றொணாத் துயரம் அடங்கட்டும். அவர் படைத்த கலை ஞானம் தொடர்ந்து வளர இளஞ் சந்ததியை உருவாக்கி அவருக்கு நினைவுச் சின்னம் நிறுவுவோம்.

### விஞ்ஞானக் கண் ....

(முதலாம் பக்க வளர்ச்சி)

பாட்டை சிராக்குவதாயும், கற்பூரம், சாம்பிராணி, குங்கிலிய புகையிலுள்ள 'ஃபாமல் பதார்த்தம் கிருமி கொல்லியாக தொழிற் படுவதுடன் மஞ்சளிலுள்ள இரசாயன பதார்த்தங்களும் கிருமிகொல்லியாக தொழிற்படுகின்றது. இவற்றை சிந்தித்து தெளிவோமாக.

## நல்லைக் குருமணியைத் துதிக்கும் நாவலர் நாடு

சொல்லைச் சுவைத்தோதித் தோத்திரம் ஆதீனம்
நல்லைச் சிவச்சீர் நகரிக்கண் — தொல்லைத்
தவத்தொடர்ந் தாற்றிய சந்திதானத்தை
நலந்துதிக்கும் நாவலர் நாடு.

### யோகசுவாமி தொழவல்ல குரு

(பங்குனி 20)–(பங்குனி 23)

செல்லப்பன் வாழ்ந்த திருநாடிதுவென்று
சொல்லவைத்த யோக சுவாமிதொழ — வல்லகுரு
நல்லைத்தேர் முட்டியில் நாளும் நடமிட்ட
சல்லைத் துதிப்போம் கசிந்து
(பங்குனி – 15)

## செந்நமை முதுமைப் பேறடைகின்றார் பெரிய பரியாரியார் ஐ. பேரம்பலப் பெரியார் நூறாண்டுப் பூர்த்தி நுகர்ச்சி

'தீர்க்காயுசு பவந்து' என்று சிரஞ்சீவியாக வழ, அன்று திவ்விய ஆசிச் சிறப்புற்றிருக்கின்றார் போலும் மடாலய மகிமைவாய்ந்த ஏழாலய மாண்புறும் பேரூரில் ஆயிரத் தெண்ணூற்றுத் தொண்ணூறும் ஆண்டு இந்த அவனியில் எழுந்த திருவாளர் ஐயம்பிள்ளை பேரம்பலம் அவர்கள்.

இவர்களுடன் பிறந்தோரில் ஒருவர் சைவ சித்தாந்த -வித்தகர் அருளானந்த சிவம் அவர்கள். பொன்னையாப் பரியாரியார்). மடம் அமைத்து இந்நாட்டுமக்கள் சைவமத உணர்ச்சியுறமுன்னோடியாக விளங்கியவர் - ஆயுள்வேத சாத்திர நூல்கள் வெளியிட்டும் சைவசித்தாந்த விளக்கவுரைகள் எழுதியும் சீட பரம்பரை ஒன்றைத்திகழ்வித்தும் பௌராணிகக் கலையை பத்தியோடுபரப்பியும் வந்த பெரியார்.

தண்ணளி வண்ணமாக விளங்கிவருபவர் பெரியார் பேரம்பலவனார். திருக்கேதீச்சரம் பாத யாத்திரை ஆதி அடியார் குழுவில் இவர் அதிசிரேட்டர். சுதேச வைத்திய முறையை இத் தேசத்திலே செழிப்புறச் சாலைகள் வைத்த பரோபகாரியார் இவருக்கு நன்மைந்தர்களும் வைத்திய கலாநிதிகள் சிரேட்ட புத்திரர் பேராசிரியர் கலாநிதி கனகசபாபதி அவர்கள் பல்கலைக்கழகக் கணிதத் தலைப்பேராசிரியர் ஆகத் திகழ்ந்து இளமையிலேயே இறையடி எய்திவிட்டனர். பேராதனைக்கழகவளாகத்தில் குறிஞ்சிக்குமரன் கோயில் எழுப்பிய சைவப் பேரறிஞராக விளங்கினர்.

சைவசித்தாந்த வித்தகர் விஞ்ஞான கலைமாணி முன்னாளிலை பரமேசுவராக் கல்லூரி அதிபர் அதிபர் திருக்கேதீசுவரத் தேவத்தான நிருவாகத் தலைவர் சைவ போதகர் மு. ஞானப்பிரகாசம் அவர்கள் யாழ் பல்கலைக் கழக நூலகர் கலைமாணி சி. முருகவேல் அவர்கள் உள்வட்ட உறவினர்கள்.

தமிழ் அபிமானிகளுக்கும் சைவ அடியார்களுக்கும் வைத்திய கலாநிதிகளுக்கும் இல்லற நல்லோர்கள் எல்லோருக்கும் ஒரு ஒளி விளக்காக ஓங்குகின்ற பெரியார் பேரம்பலவனார் இன்றும் திடகாத்திர தேகமும்சைவச் செஞ்சீரும் திகழ்ந்தபடி காட்சியளிக்கின்றார்.

### நீள நினைக்கவைத்த..

(1 ஆம் பக்க வளர்ச்சி)

அன்று இன்னொரு விசேடமாகவுள்ள நிகழ்ச்சி

ஈழகேசரிக்காக ஆரம்பிக்கப் பெற்ற திருமகள் அச்சகத்தில் ஐம்பதாண்டுகள் அரியசேவையாற்றிய திருவாளர்கள்: மு. சபாரத்தினம், செ. சி[illegible] துரை ஆ. முத்தையா அவர்களை யாழ் மாநகரசபை ஆணையாளர் திரு. பொ. பாலசிங்கம் கௌரவித்தனர்.

ஆசிரியமணி அ. பஞ்சாட்சரம், மயிலங்கூடலூர் பி. நடராசன் திரு. க. வேலுப்பிள்ளை மூவரும் பாராட்டுரை வழங்கினர்.

கலைப்பேரரசு. ஏ. ரி. பொன்னுத்துரை அவர்கள் தலைமை வகித்தனர்.

"போன வெடியை நினைவூட்டவா சீனவெடி"

'வீண்சத்தமும் விஷப்புகையும் வேண்டவே வேண்டாம்'

### கோள்வினை காட்டும் குறிப்பாகச் சூழ்வினையை

சூழ்வினை யாலே
சுகமும் துயரமும்
கோள்வினை காட்டும்
குறிப்பாக — ஆள்வினை
எப்பவோ தனெழுந்த
தென்றறி. போகமிதைத்
தப்பவோ ஒண்ணாது
தாங்கு.
('இறை-ஒளி,)

இப் பத்திரிகை யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையாரால் யாழ்ப்பாணம் காங்கேசன் துறைவீதி, 450ஆம் இலக்கத்திலுள்ள சபையாரது சைவப்பிரகாச அச்சகத்தில 990 ம ஞூ பங்குனிமீ 1உ (13-04-199) அச்சிட்டுவெளியிடப்பெற்றது. ஆசிரியர்: நம. சிவப்பிரகாசம். தொலைபேசி: 22356